மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன், இந்த மேலராமநதி 'டு' மூலக்கரைப்பட்டி 3.50 கி.மீ. தொலைவு சாலை மண்சாலை வண்டிப்பாதையாகும். இந்தச் சாலைக்கு இடைப்பட்ட அதாவது மேலராமநதியிலிருந்து மூலக்கரைப்பட்டி வரையிலே போகிற அந்த சாலையில் வேறு எந்த கிராமமும் கிடையாது சாலை அமைக்கப்படவேண்டுமானால் நிலஆர்ஜிதம் எல்லாம் தேவைப்படும். ஆகவே, காலதாமதம் ஆகிவிடும் என்கிற காரணத்தினாலேதான் கிராமச் சாலைத் திட்டத்தின் கீழ் இதை எடுத்துக் கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலராமநதியிலே ஆரம்பச் சுகாதார நிலையம் இருக்கிற காரணத்தினாலே மூலக்கரைப்பட்டி, அம்மனம்பட்டி, முத்துப்பட்டி, வடுகுப்பட்டி, பெருமாள்தேவன்பட்டி அத்தனையும் இந்த மூலக்கரைப்பட்டி பக்கத்திலே அரை பர்லாங் தூரத்திலேதான் இருக்கிறது. அந்தக் கிராம மக்கள் எல்லாம் இந்த மேலராமநதிக்கு வைத்திய வசதிக்காக வந்து சேரவேண்டிய நிலை அவசியமிருக்கிறது. ஆகவே, அந்தப் பொது மக்கள் முக்கியத்துவத்தைக் கருதி, இந்த சாலையை முதன்மை சலுகை காட்டி, அரசும் அமைச்சரும் இந்த ஆண்டிலேயே அதைச் செயல்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் சொன்னேன் ''ஆர்.ஆர்.-ல்' எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்.

கிருஷ்ணகிரி அணை

* 3890—டாக்டர். க. காஞ்சனா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிருஷ்ணகிரி அணையில் தூர்வாரி, அணையை ஆழப்படுத்தி நீர்ப்பரப்பை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

1990 மே, 7]

டாக்டர். க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த ஆயக்கட்டு கிருஷ்ணகிரி அணை கட்டப்பட்ட காலக்கட்டத்தில் 11,329 ஏக்கர். இப்பொழுது இந்த 33 ஆண்டுகளில் பயன்தரும் நிலப்பரப்பு அதிகப்பட்டுள்ளது. அணையின் நீர்பிடிப்புப் பரப்பு 4 சதுர மைல் என்றிருக்கிறது. அணைப்பகுதியில் நீர்வரத்துப் பரப்பு 2,096 சதுர மைல் என்றாகிறது. தொடர்ந்து வண்டல் படிந்து கொண்டிருக்கிற காரணத்தினால், நீர்வரத்துப்பரப்பு பாதியாகக் குறைந்திருக்கிறது. எனவே, இந்த ' deciltıng ' கிருஷ்ணகிரிக்கு அத்தியாவசிய அவசரமானதொன்றாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை மறுபரிசீலனை செய்ய முன் வருவாரா, அதுமட்டுமல்ல வருங்காலத்தில் மேல் மண் படிவதை தடுக்கின்ற வகையில் அணையின் தென்வடல் திசையில் அமைந்துள்ள மலை அடிவாரத்தில் பெரிய பெரிய மரங்களை வைத்து வளர்க்க, வனத்துறையுடன் கலந்து ஆலோசித்து எங்களுடைய அணைக்கு நன்மை செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினைதூர்வாரலாமா என்று 1988—90-ஆம் ஆண்டு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. தூர் வாருவதற்கு 76 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் கிருஷ்ணகிரி அணையினுடைய பாசன ஆயக்கட்டு அவர்கள் சொன்னதைப்போல் 11 ஆயிரத்து சொச்சமல்ல. 9.12 ஏக்கர். இதிலே அவர்கள் குறிப்பிட்டதைப் போல் மண் படிந்து இருக்கிறதா என்று பார்த்தால், 1983-ஆம் ஆண்டு பூண்டி உதவி இயக்குநர் அவர்களால் நவீன முறையிலே ஆய்வு செய்யப்பட்டது. 1666.29 மில்லியன் கனஅடி குறைவாக இருக்கிறது. அதாவது அணைகட்டி முடிக்கப்பட்ட 26 வருடங்களில் கொள்ளளவு 28.5 சதவீதம் குறைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. இது மிகச் சொற்பம். இரண்டாவது, மண் வருவதற்கு வழியில்லை. கர்நாடக மாநிலத்திலிருந்து வருகிற பெண்ணையாற்றிலே கட்டப்பட்டது கிருஷ்ணகிரி அணை. அப்பொழுது கர்நாடக மாநிலத்திலிருந்து மண்ணையும் வண்டலையும் அடித்துக் கொண்டு வரும். ஆனால் இப்பொழுது கிருஷ்ணகிரிக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையிலே கலவரப்பள்ளி ஸ்கீம் என்ற ஒரு அணை கட்டப்பட்டது. எனவே, அங்கேயே வண்டல் மண் தேங்கி விடுகிறது. கலவரப்பள்ளிக்கும், கிருஷ்ணகிரி அணைக்கும் சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதற்கு இடையிலே குளகிரி சின்னாறு என்கிற இன்னொரு ஆறு வந்து சேர்கிறது. அந்த ஆற்றின் மூலம் மண் வந்து சேர்கிறதா என்றால் அதிலேயும் ஒரு அணை

கட்டப்பட்டு விட்டது. எனவே, வருகிற மண் குளகிரியிலே சேர்ந்து விட்டது. சிறு சிறு காட்டாறுகள் இருக்கின்றன. அவற்றிலும் நாம் சிறு சிறு அணைகளைக் கட்டி விட்டோம். ஆக, எந்த வழியிலும், எந்த ரூபத்திலும் கிருஷ்ணகிரி அணைக் குள்ளே மண் வந்து சேர வழியே இல்லை. ஆகையினாலேதான், கேள்விக்கே இடமில்லை என்று சொன்னேன்.

டாக்டர். க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் 28.5 சதவீதம் நீர் வரத்து பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று விடை அளித்திருக் கிறார்கள். ஏதோ கொஞ்சம், ஓரளவுக்காவது எங்களுடைய நீர் வரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது. தூர் வாருவதற்கான செல வினத்தைக் குறிப்பிடுகின்ற பொழுது, அவர்கள் 100பர்சென்ட் அன்-எகனாமிகல் என்கிற அளவிலேயும் பதில் அளித்திருக்கின்றார் கள். எனவே படிந்திருக்கின்ற கொஞ்ச நஞ்ச வண்டல் மண்—வளமான மண்—விவசாயிகளினுடைய மனம் கவர்கின்ற அந்த மண்ணை, பி. டபிள்யூ டி.யே விளம்பரம் செய்து விவசாயிகள் அவர்களாகவே அவர்களுடைய சொந்தச் செலவில் வாரிக்கொண்டு போவதற்காவது விளம்பரம் செய்ய முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அணை யிலே நீர் இல்லாத காலத்திலே வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்துக்கொண்டு போவதிலே பொதுப் பணித் துறைக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை, ஒரே ஒரு கண்டிஷன், அவர்கள் 3 அடி ஆழத்திற்குள்தான் வண்டல் மண்ணை எடுக்க வேண்டும். சில நேரங்களிலே 10அடி 15 அடி வரை போகிறார்கள்; உள்ளே மணற்பாங்கான பகுதி வருகிற வரையில். அப்பொழுது வருகிற தண்ணீர் மணலிலே ஊறி விடும். எனவே, மணற்பகுதி வருகிற அந்த அளவிற்குப் போகக் கூடாது. ஒரு 3 அடி ஆழத்திற்கு இருக்கிற வண்டல் மண்ணை எடுப்பதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் தொகுதியில் இருக் கின்றவர்களை, நீர் வற்றிய பிறகு மண் எடுக்கச் சொல்லலாம்.

திரு. குமாரி ஆனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிருஷ்ணகிரி அணைக்கட்டுக்கு நேரே மேலே இருக்கின்ற அந்தச் சிறு மேடு—மாதேவம்பட்டி என்ற இடத்திலே இருக்கின்ற சாராயம் வடிக்கின்ற அந்தத் தொழிற்சாலையிலேயிருந்து வருகின்ற அந்தக் கழிவு நீரெல்லாம் அணையிலே சேர்வதாக வும் சுற்றியிருக்கின்ற தென்னை மரங்கள் எல்லாம் பட்டு இருப்பதாகவும், நானே நேரில் பார்த்தேன். அவைகளைத் தடுப்பதற்கு அரசு என்ன முயற்சியை எடுத்திருக்கிறது?

1990 மே 7

ம்ாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நானும் நேரிலே பார்த்தேன். கெம்பிளாஸ்ட்டிலேயிருந்து வருகின்ற அந்தத் தண்ணீர் அணையிலே கலந்து, தண்ணீரினுடைய கலரே மாறிப் போயிருந்தது. நானே கேட்டேன் அதிகாரிகளை, ஏன் தண்ணீர் கலர் இப்படி மாறியிருக்கிறதே என்று. அந்த கெம்பிளாஸ்ட்டினுடைய கழிவு நீரைத் திறந்து விட்டு விடுகிறார்கள் என்றார்கள். 2, 3 தினங்களுக்கு முன்னால்கூட நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள் எழுப்பி இருந்தார்கள். அதை நாங்கள் விடவில்லை; நாங்கள் அதற்கு வேறு வழி கண்டிருக்கிறோம் என்று அந்தக் கம்பெனி தெரிவித்திருக்கிறது. இருந்தாலும் அதிகாரிகளைத் திடீர் என்று அந்தப் பகுதிக்கு விஜயம் செய்து தண்ணீர் கலக்கிறதா என்று பார்த்து எங்களுக்குத் தெரிவிக்கும்படி தெரிவித்திருக்கிறோம். உடனடியாக அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் சொன்னவைகள் யாவும் உண்மை.

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட மக்களின் விவசாயத்திற்கு மிக முக்கியமாகப் பயன்படும்...... (மணியடிக்கப்பட்டது).

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அணையினுடைய மழைக்கால மீதமான வேஸ்டேஜ் தண்ணீரைப் பாரூர் ஏரியின்பேரிலே விடப்பட்டு நீர் வெளியேற்றப்படுகிறது. அப்படி விடப்படும் வேஸ்டேஜ் நீரை பாரூர் ஏரியினுடைய கொள்ளளவில் கணக்கிடப்படுகிறது என்பதை அரசு மாற்றியதனாலே, விவசாயிகளின் அறுவடைக்கு ஏறத்தாழ ஒன்றரை மாதக் காலம் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதை அரசு பரிசீலித்து ஏரியின் கொள்ளளவைக் குறைப்பதை அரசு கைவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்ளே, புதிய செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கேட்டால் அது குறித்து விவரமாக பதிலை அளிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

மின் கம்பங்கள்.

* 5325—திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :